Simpo PDF Merge and Split Unregistered Version - http://www.simpopdf.com

රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතනය / தொலைபேசி: (94) 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: (94) 011- 2692254 / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: R/3/32013
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2015.09.14

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும்,

**<u>அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் புதிய நியமனம் பெறுபவர்களுக்கான சேவைத்தொடக்கப் பயிற்சி. :ஆரம்ப திகதி : 15.09.2015</u>**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வழிநடத்தல் மற்றும் ஒருங்கமைப்பின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்தினதும் மாவட்ட செயலாளர்களினால் 15.09.2015 ஆந் திகதி முதல் நடாத்தப்படும் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் புதிய நியமனம் பெறுபவர்களிக்கான சேவைத்தொடக்கப் பயிற்சி தொடர்பானது.

அதற்கமைவாக என்னால் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 111 இற்கு 15.09.2015 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ள பயிலுநர் அலுவலர்கள் அத்திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு சேவைத்தொடக்கப் பயிற்சிக்காக தங்கள் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதுடன் அவ் அலுவலர்களின் நியமன கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் இணையம் மற்றும் ஊடகங்கள் மூலமும் இது தொடர்பாக புதிய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.
இணையத்தில் பெயர்கள் அறிவிக்கப்பட்டு இதுவரை தபால் மூலம் நியமனக் கடிதம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்கு சமூகமளித்தால் அவர்களின் ஆளடையாளங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நேர்முகப்பரீட்சையில் கொடுக்கபட்ட சிபார்சுக்கமைவாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை தாமதமாக சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் உரிய நியமனக் கடிதத்துடன் சமூகமளித்தால் அவ் அலுவலர்களையும் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
அவ்வாறான விண்ணப்பதாரர்கள் மிக சொற்ப அளவு என்பதுடன் இது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் 0718085410 அல்லது 0112694560 என்னும் எனது தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 0718065864 அல்லது 0112681237 என்னும் ஆட்சேர்ப்பு உதவிப் பணிப்பாளரது தொலைபேசி இலக்கங்களுக்கோ தொடர்பினை ஏற்படுத்திகொள்ளுமாறு அறிவிக்கின்றேன்.

மேலும் நியமனம் பெற்ற அலுவலர்கள் சேவைப்பொறுப்பேற்றலின் போது பூரணப்படுத்த வேண்டிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைவான படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை இரண்டு பிரதிகளுடன் சரியாக பூரணப்படுத்த அலுவலர்களுக்கு பணிப்புரை விடுத்து அவற்றை எனக்கு சமர்ப்பிக்குமாறும் பயிற்சிக்கு சமூகமளித்துள்ள பிரசவ விடுமுறை பெற உரிமையுள்ள அலுவலர்களின் விடுமுறை தொடர்பாக அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2013 ஐ பின்பற்றுமாரும் அவர்களுக்கு விடுமுறை அனுமதியளித்து பிரசவ விடுமுறை சிபார்சுடன் எனக்கு சர்ப்பிக்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் புதிய அலுவலர்களுக்கு தங்கள் மாவட்டத்தில் பயிற்சிகளை நடாத்துவதற்கான தங்கள் ஒத்துழைப்பினை மிகவும் மெச்சுகின்றேன்.

கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

Simpo PDF Merge and Split Unregistered Version - http://www.simpopdf.com

(இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்)

முகவரி: ..........................................................................................
..........................................................................................................
..........................................................................................................
திகதி: ..................................................................

.................................................. மாவட்ட செயலாளர் ஊடாக,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு.

ஐயா,

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் (தரம் III) பதவியில் சேவைக்கு சமூகளித்தல் - சேவைத்தொடக்கப் பயிற்சி

மேற்குறிப்பிட்ட பதவிக்கு என்னை நியமித்து இணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட ............................... ஆந் திகதிய ............................... ஆம் இலக்க கடிதம் தொடர்பானது.

02. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சேவை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவேன் என ..................................................................................... ஆந் திகதி ........................................................................................................................... இல் எனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டேன் என தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு நம்பிக்கையுள்ள,

கையொப்பம்: ..................................................
பெயர்:......................................................................
பதவி: ..................................................................

---

(நியமன அதிகாரி)

(திரு/திருமதி/செல்வி) ........................................................................................ அலுவலர் ..................................... ஆந் திகதி .......................................................... மாவட்ட செயலகத்தில் , அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இன் பதவியில் கடமைப் பொறுப்பேற்றுக்கொண்டார் என உறுதிப்படுத்துகின்றேன்

ஒப்பம்: ...............................................
பெயர்: ...............................................
பதவி: ,..............................................
திகதி: ................................................. பதவி முத்திரை ................................................

Simpo PDF Merge and Split Unregistered Version - http://www.simpopdf.com



எனது இலக்கம் : EST-7/LEAVE/03/3183
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2013.08.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்
மற்றும் திணைக்களத் தலைவர்கள்

**<u>குழந்தயை பிரசவித்த பின்னர் அரச சேவையில் நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் புதிய அலுவலர்களுக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இற்கமைய பிரசவ விடுமுறையினை வழங்கல்</u>**

அரச நியமனம் ஒன்றினைப் பெறுவதற்கு முன்னர் குழந்தையைப் பிரசவித்துள்ள அலுவலர் ஒருவர்,அரச சேவையில் புதிய நியமனம் ஒன்றைப் பொறுப்பேற்றதன் பின்னர் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய பிரசவ விடுமுறையினை வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக பல்வேறு கேள்விகள் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய அரச பெண் அலுவலர் ஒருவருக்கு பிரசவ விடுமுறையினை வழங்குவது குழந்தையின் போசனை மற்றும் பாதுகாப்புக்காக வேண்டியாகும். ஆதலால் பிரசவ தினம் தொடக்கம் அலுவலர் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட திகதி வரையான காலப்பகுதிக்குரிய நாட்களின் எண்ணிக்கையை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இன் ஏற்பாடுகளுக்கமைய சம்பளத்துடன் பெற்றுக்கொடுக்கப்படும் 84 நாட்கள் பிரசவ விடுமுறைக் காலப்பகுதியிலிருந்து குறைத்து எஞ்சிய காலப் பகுதியை மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி சம்பளத்துடனான விடுமுறையாக வழங்கப்பட முடியும்.

03. மேலே குறிப்பிடப்பட்ட வகையில் கணிக்கப்பட்டதன் பின்னர் அலுவலருக்கு உரித்தாவது அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையாயின் மேற்படி விடுமுறையினையும் அலுவலரின் கோரிக்கைக்கமைய வழங்க முடியும்.

04. குழந்தைப் பிரசவத்தின் பின்னர் அரச சேவைக்குப் புதிய நியமனங்களைப் பெற்று, இதுவரை அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 04/2005 இற்கமைய சம்பளத்துடனான, அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய கால எல்லையைத் தாண்டாத அலுவலர் ஒருவர் தொடர்பில் மேற்படி ஆலோசனைகளுக்குப் புறம்பான வகையில் வழங்கப்பட்டுள்ள விடுமுறைகளை தேவையான சீராக்கல்களை மேற்கொண்டு திருத்தம் செய்யப்படலாம் என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்.பி.பீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு